26th February 1966]

பெற்ற பின்னுல் தங்கள் பண்ணைகளை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிருர்கள். சிலர் விவசாய இலாகாவுக்கு வந்து உத்தியோகம் பார்க்கிருர்கள். பஞ்சாயத்து யூனியன் போன்றவற்றிலும் பலர் வேலை செய்து கொண்டிருக்கிருர்கள்.

திரு. கோ. சி. மணி : இந்த விவசாயப் பள்ளியில் பயிலுவதற்கு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் தான் வரலாம் என்று ஏதாவது கட்டுப்பாடு இருக்கிறதா? இல்லையென்ருல், இதில் சேருவதற்கு என்னென்ன தகுதி இருக்கவேண்டும்? வயது நிர்ணயம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பத்தாவது வரை படித்திருக்கவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. இதர விபரங்களுக்குத் தனியாகக் கேள்வி போடவேண்டுகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற இந்தக் காலத்தில், விவசாயத்திற்கு என்று தனியாகப் பள்ளி இருப்பதை மாற்றி, எல்லாப் பள்ளிகளிலும் விவசாயத்தை ஒரு தனிப்பாடமாக வைத்துக்கொள்ளலாம் என்று அரசாங்கம் ஏதாவது உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடமில்லை.

குடி நீர் வசதி

* 120 கேள்வி:—திரு மு. கருணாநிதி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உலக சுகாதார நிறுவனத்தைச் (WHO.) சேர்ந்த நிபுணர்கள் கோவை குடி தண்ணீர் திட்டத்தைப் பரிசீலனை செய்தனரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த இரு ஆலோசகர்கள் பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப் பணிகள் துறை அதிகாரிகளுடன் கோயம்புத்தூருக்குச் சென்றனர். அவர்கள் கோவை நகருக்காக நீர் வழங்கல்—கழிவு நீர் விரிவுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க உதவி புரிவார்கள். இதை முனைப்புத் (Package Programme) திட்டத்தின் கீழ்ச் சேர்த்து வெளிநாட்டு உதவியுடன் அத்திட்டம் நிறைவேற்றப்படும். இதை முனைப்புத் திட்டத்தில் சேர்க்கும் பொருட்டு, இதுபற்றி விரிவான அறிக்கை ஒன்று இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. மு. கருணாநிதி : கோவையின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கோளத்திலிருந்து உதவி பெறுவது எந்த நிலையில் இருக்கிறது ?

[26th February 1966

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கே.ஏ. மதியழகன் : சார், நம்மிடமிருந்து அரிசி கேட்கின்ற கேரளாத்தாரிடமிருந்து, அடிப்படைத் தேவையான தண்ணீர் கிடைப்பதற்கு போராட்டம் நடத்தவேண்டும் என்று சொல்லுகின்ற தகவல் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தமாதிரியான போராட்டம் வரப்போகிறது என்ற தகவல் எனக்கு வரவில்லை. அப்படி வந்தால் அப்போது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சென்னை நகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் நிர்வாகத்தில் இருக்கிற காரணத்தால் குடிநீர்ப் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்படாமல் இருக்கிறது என்றாலும், காங்கிரஸ் நகராட்சி நடத்துகின்ற தஞ்சை, திருச்சி, சேலம் முதலிய இடங்களில் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த அரசாங்கம் எந்தக் கட்சி ஆட்சி நடத்துகிறது என்பதைப் பார்த்து குடி தண்ணீர்ப் பிரச்னையை எடுத்துக்கொள்ளவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, உலக சுகாதார நிறுவனத்தார் கூறியபடி அறிக்கை ஒன்று தயாரித்து இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அதில் எந்தெந்த சாத்தியக் கூறுகளின் மூலம் குடிநீர் வழங்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடி தண்ணீர் கொடுப்பது, சாக்கடைத் திட்டம், இந்த இரண்டையும் சேர்த்து, டபிள்யு. எச். ஓ. ஐந்து யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அவையாவன—

(1) The population of the selected town should be over two lakhs.

(2) The minimum estimated cost of the scheme may be Rs. 50 lakhs.

(3) Towns and cities of special economic industrial, strategic or other importance should have priority.

(4) Each State may send up two to four projects depending on their size and local needs.

(5) The projects should be able to demonstrate financial self-sufficiency, as one of the pre-requisite conditions for sanctioning loan.

26th February 1966]

திரு. கே. எ. மதியழகன் : திருவனந்தபுரத்தில் கனம் உணவுத் துறை அமைச்சர் அவர்களும், தொழில் துறை அமைச்சர் அவர்களும் கேரள சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்களே, அதிலே கோயம்பத்தூர் சிறுவாணி நீர்த் திட்டம் சம்பந்தமாகத் திட்டவட்டமான முடிவு எடுக்கப்பட்டதா ? 11-00 a.m.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்குத் தான் தனிக் கேள்வி போடும்படி கூறினேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சபாநாயகர் அவர்களே, நான்கு திட்டங்கள் வரையில் ஒவ்வொரு ராஜ்யமும் அனுப்பலாம் என்று கூறியிருந்தும் நம் ராஜ்யத்திலிருந்து கோயம்பத்தூருக்கு மட்டும் தனித் திட்டம் தயாரித்து அனுப்பப்பட்ட காரணம் என்ன? மற்ற திட்டங்களும் தயாரித்து அனுப்பப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருப்பது கோயம்பத்தூர் குடி நீர்த் திட்டத்தைப் பற்றித்தான். மற்ற திட்டங்களும் பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன.

* 121 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரைக்குக் குடி தண்ணீர் வசதியைப் பெருக்க புதிய திட்டம் ஏதாவது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், விவரம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) வைகை ஆற்றில் போனை செகுலேட்டரை உற்பத்தியாக வைத்துக் கொண்டு மதுரை நகரில் குடிநீர் வசதியைப் பெருக்கு வதற்குரிய செயற்குறிப்பின் திட்ட வரைவுக்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. நீர்த் தேக்கங்கள் முதலியன அமைப்பதற்கு ரூ. 157 லட்சமும், அவற்றைப் பேணி வருதலுக்கு ஆண்டு தோறும் ரூ. 2.551 லட்சமும் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தப் புதிய திட்டம் எப்போது அமலுக்கு வரும் என்று அறியலாமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அநேகமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. சா. கணேசன் : மழை காலத்திலும், தண்ணீர் வராத காலத்திலும் பயன்படக் கூடியதாக வருகிற வைகை நீரைப் பெரிய அளவுள்ள நீர்ப் பரப்பில் தேக்கி வைத்து அதன் மூலமாக மதுரை நகரத்திற்கு நிரந்தரமான முறையில், தண்ணீர்க் கட்டு இல்லாமல் குடிநீர் சப்ளை செய்ய அரசாங்கம் திட்டத்தில் இடம் செய்திருக்கிறதா ? இல்லை என்றால், இந்தக் கருத்தை ஏற்று அதற்கு வேண்டிய வரையறைகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.